முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.12.2022**, சனிக்கிழமை

1. அருட்பிரகாச ஞான வள்ளலே
அறமாக வந்த அண்ணலே
அருட்சுடராக ஞானம் அருளி
ஆற்றல் தரும் அரங்க ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் அனுகூல ஆசிதனை
இனிமைபட சுபகிருது சிலை திங்கள்
இயம்பிட மூவையோர் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் **16** ம் நாள் **31.12.2022**, சனிக்கிழமை)
3. வாரமதில் புலிப்பாணிச்சித்தர் யானும்
வழங்குவேன் தொண்டர்கள் நலமுற
சோரமிலா ஞானப்படைகளாகவே
செகமெல்லாம் அரங்கன் தொண்டர்கள்
4. தொண்டர்கள் நிரம்பி வருக
தெய்வபலமாக எங்கும் ஆற்றல்
உண்டாகி மாற்றம் ஞானவழி
உலகம் கண்டடைய நேரும்
5. நேருமை கொண்ட தலைமைகள்
நீதிமான்கள் ஆளும் வண்ணம்
பேருலகம் நிலைகள் உயர்ந்து
புகலுவேன் ஏற்றம் காண்கும்
6. காண்கவே ஞான ஆட்சியாகவே
கலியுகம் மாற்றம் கண்டு
மேன்மையும் சமூகத் தேற்றமும்
முழுமை கொண்ட மக்கள் பலமாக
7. ஆகவே உலகம் அடைதல் கண்டு
ஆறுமுகனார் ஆசி அருள்படவே
யுகமே ஞானயுகமாக மாறும்
உயிர்கொலை நீக்கிய ஜீவதயவுமிக்க
8. மிக்கநல் ஞானவான்கள் ஆகவே
மண்ணுலகம் சக்தி பெருகி
தேக்கமின்றி இயற்கை பலமுற
தேவர்கள் ஞானிகள் தெய்வங்கள்
9. தெய்வங்கள் பாதுகாப்புப் பெருக
தெரிவிப்பேன் ஞான ஆட்சியாக
அய்யமற மாற்றம் காண்கும்
அறிவிப்பேன் ஞானதேசிகன் அருளிய

10. அருளிய உண்மை வழிகள்
அனைத்தும் வேதமாக மாறி
இருளெனும் சகல இன்னலும்
இந்த உலகத்தை விட்டு விலகி

11. விலகியே எல்லோரும் ஞானிகளாகும்
விரைவு மாற்றம் இனிதே கண்டு
உலகம் ஞான உலகம் ஆகும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–